## 84. ஊற்றுங்க ஊற்றுங்க உன்னத

### பல்லவி

ஊற்றுங்க ஊற்றுங்க உன்னத ஆவியை
எங்க மேலே ஊற்றுங்க உந்தன் ஆவியை

### அனுபல்லவி

*கடைசிநாளில் உந்தன் ஆவியை*
*யாவர்மேலும் ஊற்றுவேன்*
*என்றுரைத்த தேவனே ஊற்றுங்க – (2)*

### சரணங்கள்

1. குமாரர் மேலும் குமார்த்திகள் மேலும்
ஊற்றுவேன் என்றுரைத்த தேவனே
ஊழியர்கள் மேலும் ஊற்றுங்க
தீர்க்க தரிசனத்தை பேசட்டும்
\- ஊற்றுங்க

2. வாலிபர் மேலே ஆவி ஊற்றுங்க
தரிசனங்களை காணட்டும்
முப்பர்கள் மேலே ஆவி ஊற்றுங்க
சொப்பனங்களை பார்க்கட்டும்
\- ஊற்றுங்க

3. பிதாவாகிய தேவன் வாக்கு பண்ணின
ஆவியானவரை ஊற்றங்க
கீழ்படிகிற யாவர் மேலும்
உந்தன் ஆவியை ஊற்றுவீரே
\- ஊற்றுங்க